பிரசார் பாரதி
அந்திய வானொலி, சென்னை-4

29 12 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள் -</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழியாக திகழ்வது இந்தியர்கள் அனைவருக்கும் பெருமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தால், தற்போது ஏழைகளும் புற்றுநோய்க்கு உரிய காலத்தில் உயர் சிகிச்சை பெறுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

5. உலக **Rapid** செஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் கோனேரு ஹம்பி பட்டம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<<>>>>>**

தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழியாக திகழ்வது இந்தியர்கள் அனைவருக்கும் பெருமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழ்மொழியை கற்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறிய பிரதமர், ஃபிஜி நாட்டில் மத்திய அரசின் உதவியோடு, தமிழ்மொழி கற்பிக்கப்படுவதாகவும் கூறினார்.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தால், தற்போது ஏழைகளும் புற்றுநோய்க்கு உரிய காலத்தில் உயர் சிகிச்சை பெற முடிவதாக கூறினார்.

*(வாய்ஸ் பைட் - மோடி (1) - 30செகண்ட்ஸ்)*

அரசின் நடவடிக்கைகளால் மலேரியா பாதிப்பால் ஏற்படும் உயிரிழப்பும், 80 சதவீதம் குறைந்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - மோடி (2) — 55 செகண்ட்ஸ்)*

மக்கள் ஒன்றுபட்டு பணியாற்றினால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்ட திரு நரேந்திர மோடி, ஒடிஷா மாநிலம் கலஹண்டியில் விவசாயிகள் உருவாக்கியுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பின் மூலம், அப்பகுதி காய்கறி உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளது என்றார்.

*(வாய்ஸ் பைட் - மோடி (3) - 33 செகண்ட்ஸ்)*

ஒரு காலத்தில் மாவோயிஸ்டுகளின் பிடியில் சிக்கியிருந்த பஸ்டர் பகுதியில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டியால் அப்பகுதியில் ஒரு புதிய புரட்சி உருவெடுத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - மோடி (4) — 48 செகண்ட்ஸ்)*

எகிப்து நாட்டை சேர்ந்த 13 வயது மாற்றுத்திறனாளி சிறுமி வரைந்த தாஜ்மகால் ஓவியம் காண்போர் மனதை ஈர்க்கும் வகையில் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

*(வாய்ஸ் பைட் - மோடி (5) - 58 செகண்ட்ஸ்)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்று இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

நாட்டின் ஒற்றுமையை அறிவுப்பூர்வமாக மட்டுமின்றி, அனுபவ ரீதியாகவும் புரிந்துகொள்வதற்காகவே பாரத தர்ஷன் குடும்ப சங்கமம் நடத்தப்படுவதாக நாகாலாந்து ஆளுநர் திரு இல. கணேசன் கூறியுள்ளார்.

ஈரோட்டில் நடைபெற்ற பாரத தர்ஷன் விழாவில், பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் அனைவரும் நாட்டின் முக்கிய பகுதிகளுக்கு சென்று, அந்த பகுதியில் உள்ள முக்கிய இடம் மற்றும் மக்களை சந்திக்க வேண்டும் என்றார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் விற்பனையால் சட்டம் – ஒழுங்கு என்பதே கேள்விக்குரியாகியுள்ளது என்றார்.

மத்தியில் பிஜேபி ஆட்சி அமைத்த பிறகுதான் அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரின் வாழ்க்கை தொடர்பான அனைத்து இடங்களும், நினைவிடங்களாக மாற்றப்பட்டுள்ளது என்றும் திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தூத்துக்குடியில் 32 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

சுமார் 63 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் இந்த டைடல் பூங்கா கட்டப்பட்டுள்ளது.

இது தென்தமிழகத்தின் முதலாவது மினி டைடல் பூங்காவாகும்.

இதன்மூலம், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அரசு பேருந்துகளில் ஜி பி எஸ் கருவி பொருத்தும் திட்டம் விரைவில் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டம் தற்போது சென்னையில் வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துள்ளது என்றார்.

முன்பு பண்டிகை காலங்களில் ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக எழுந்த புகாரின்பேரிலேயே தனியார் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் இயக்கி, பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டதாக அவர் கூறினார்.

மேலும், சென்னையிலிருந்து, கேரள மாநிலம் வைக்கத்திற்கு இரண்டு நேரடி பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையையொட்டி, செகந்திராபாத்திலிருந்து - வேளாங்கண்ணிக்கும், ஹுப்பள்ளியிலிருந்து – கன்னியாகுமரிக்கும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதற்கான முன்பதிவு இன்று தொடங்கியது.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கோவை மாநகராட்சிப்பகுதியில் சுமார் 31 கோடி ரூபாய் மதிப்பீலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு செந்தில் பாலாஜி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

தூய்மை பாரதம் திட்டத்தின்கீழ், மயிலாடுதுறை மாவட்டம் மாப்படுகை மற்றும் வானதிராஜபுரம் ஊராட்சிகளில் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது மற்றும் மறுசுழற்சி குறித்த விழிப்புணர்வு பேரணிகளை ஆட்சியர் திரு மகாபாரதி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் வரும் 3-ஆம் தேதி தொடங்க இருப்பதாக ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

------------------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் உட்கோட்டத்தில் பணியாற்றும் காவல்துறையினருக்கான கலவர தடுப்பு ஒத்திகை மற்றும் பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக **Rapid** செஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் கோனேரு ஹம்பி பட்டம் வென்றுள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க்கில் இன்று நடைபெற்ற இறுதிச்சுற்றுப் போட்டியில், அவர் இந்தோனேஷியாவின் **Irene Sukandar**–ஐ வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம், இந்த சாம்பியன் பட்டத்தை இரண்டாவது முறையாக வென்ற சிறப்பை பெற்றுள்ளார்.

கோனேரு ஹம்பியின் இந்த சாதனைக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

------------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சூர்மா அணியை – தமிழக அணி எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8.15க்கு தொடங்குகிறது.

மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் - பெங்கால் அணிகள் மோதுகின்றன.

<<<<<<END>>>>>